# DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| **C.C.No. 163 /2023, Kunnam P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அன்பரசு | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | பெரியசாமி | Occupation | : | ஹோட்டல் வேலை |
| Village | : | புதுவேட்டக்குடி | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 29/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.11.2025 | | | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 1,2,4 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஹோட்டல் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி அந்த கையெழுத்தை நான் போட்ட தேதி வருடம் ஞாபகம் இல்லை. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. என்னுடன் சரவணன் என்பவரும் கையெழுத்து செய்தார். கடந்த 3 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 4 மணியளிவில் புதுவேட்டக்குடிக்கு போலிசார் அத்தை , மாமா, ஆகியோருக்கு இடையே நடந்த சண்டை சம்பந்தமாக விசாரிக்கவந்திருந்தனர். நான் அப்போது பேருந்து நிறுத்தத்தில் இருந்தேன். பாரவை மகசரில் உள்ள 2-வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரனை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. போலீசார் விசாரணையில் கடந்த 21.03.2023 ம் தேதி அன்று காலை 7.45 மணிக்கு சாட்சி பாக்கியராஜை எதிரிகள் அடித்தது சம்பந்தமாக, 26.03.2023 ம் தேதி மதியம் 1 மணிக்கு போலிசார் விசாரித்துக்கொண்டிருந்ததாகவும், சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகசரில் நானும் சரவணன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று கூறவிட்டு தற்போது எதிரிகள் உறவினர் என்பதால்

DMC KUNNAM

அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUM JM COURT, KUNNAM

DMCUMCOURTKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 163 /2023, Kunnam P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாரதி | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | பாண்டியன் | Occupation | : | வெல்டிங் வேலை |
| Village | : | புதுவேட்டக்குடி | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 26/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.11.2025 | | | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 1,2,4 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். பட்டியல் சாட்சி 1 ஐ தெரியும் அவர் தற்போது சென்னையில் வேலை பார்க்கிறார். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. பிரச்சனை நடந்தபோது நான் கொளப்பாடியில் இருந்தேன். பிறகு அக்கம்பக்கத்தினர் சண்டை என கூற கேள்விப்பட்டேன். அ.சா.1 க்கு எதனால் காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. போலீசார் விசாரணையில் கடந்த 21.03.2023 ம் தேதி அன்று காலை 7.45 மணிக்கு பட்டியல் சாட்சி 1 வீட்டில் சத்தம்கேட்டு சென்று பார்த்ததாகவும், அப்போது எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டி அடித்தாகவும், அதற்கு பட்டியல் சாட்சி 1 சத்தம்போட்டதாகவும், அவரது தாயார் வெள்ளையம்மாள் சத்தம்போட்டதாகவும், அவர்களை தள்ளிவிட்டு 3–ம் எதிரி பக்கத்தில் இருந்த அருவாள் மனையை அ.சா.1 ன் வலது கை விரல்களின் மேல் அறுத்துவிட்டதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், கூறவிட்டு தற்போது எதிரிகள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.